Virtual Schools

பெப்ரவரி 2021

Toronto District School Board

## TDSBஇன் மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலைக் குடும்பத்தவர்களுக்கான செய்திமடல்

தொடர்ந்து  நாம் அனைவரும் சவாலான இந்தக் காலகட்டத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் வேளையில், குடும்ப தினத்துடன் கூடிய வார இறுதி நாட்களை மகிழ்வுடன் களிக்கவும் சற்று ஓய்வெடுக்கவும் ஒன்றாக இனிதே இருக்கவும் ஒவ்வொருவருக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கும் என நாங்கள் நம்புகின்றோம்.

மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை மாணவர்களும் பணியாளர்களும் இந்த மெய்நிகர் சூழலில் இருந்து முடிந்தளவில் அதிக பயனைப் பெறவும் வெவ்வேறு வழிகளில் தொடர்ந்து கற்றும் கற்பித்தும் வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் கடந்து செல்லும்போது, வகுப்பறைகளில் கற்றலுக்கான புதிய மற்றும் ஆக்கபூர்வமான கற்றல் செயற்பாடுகள் வகுப்பறைகளில் இடம்பெறுவதை நாங்கள் கேள்விப்படுகின்றோம்.

இந்த மாதம் மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலையில் நாங்கள் சில புதிய மாணவர்களை வரவேற்றதுடன் ஒவ்வொருவரும் சகமாணவர்களுடன் சகஜமாக இணைந்து தமது மெய்நிகர் வகுப்புகளை இனிதே அனுபவிக்கின்றனர் என நம்புகின்றோம்.

மேலதிக தகவல்கள் மற்றும் அண்மித்த தகவல்களுக்குத்  தயவுசெய்து பார்வையிடுங்கள்: www.tdsb.on.ca/virtualschool அத்துடன், பின்தொடருங்கள் Twitter @tdsbvs.

## COVIDஐ சமாளித்தல்

உலகளாவிய இந்த நோய்த் தொற்றுப் பரவலின்போது மனநல ஆரோக்கியம் மற்றும் உடல்நலம் பற்றி உரையாடுவதற்காக குடும்பங்கள் பெப்ரவரி 11 அன்று TDSB மனநல ஆரோக்கிய நிபுணர்களுடன் இணைந்தன. [இணைய ஒளிபரப்புப் பதிவு ஒன்றை  இங்கே பார்க்கவும்.]

மனஅழுத்த்ததைக் கையாளும் வழிகளை ஆராய்தல், உடல்ரீதியான செயல்பாடுகளை உறுதிசெய்தல், திரை நேரத்தைக் கையாளுதல் போன்ற தலைப்புகளில் கலந்துரையாடும் உளவியல் மற்றும் சமூகப் பணி தொழில்சார் நிபுணர்களுடன் இணைந்து ஒரு சமூக இணையக் கருத்தரங்கையும் இந்த மெய்நிகர் பாடசாலை நடத்தியது. [ஒளிபரப்புப் பதிவு ஒன்றை  இங்கே பார்க்கவும்.]

## முன்பதிவின்றி மெய்நிகர் நிகழ்சிகளுக்கு எங்களுடன் இணையுங்கள்!

TDSB தொழில்சார் ஆதரவுச் சேவைகளிலுள்ள பணியாளருடன் நேரடியாக இணையுங்கள்.  உங்களுடைய பிள்ளையின் மனநலம் மற்றும் நல்வாழ்வுக்கு எவ்வாறு ஆதரவு வழங்கலாம் என்பது பற்றிய கேள்விகள் கேட்பதுடன் அவற்றுக்கான பதில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- [செவ்வாய்க்கிழமைகளில்  காலை 10:00 - 11:00]
- [வியாழக்கிழமைகளில் இரவு 7:00 - 8:00]

## மார்ச் விடுமுறைத் திகதிகளில் மாற்றம்

பொதுச் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின்பேரில், சமூகத்தில் COVID-19 பரவுதலைத் குறைப்பதற்கு உதவும்பொருட்டு மார்ச் விடுமுறையை கல்வி அமைச்சு தாமதப்படுத்தியுள்ளது. இந்த விடுமுறை **ஏப்ரல் 12 – 16, 2021** ஆக இருக்கும். மார்ச் மாதம் பூராவும் வழமையான வகுப்புகள் தொடர்ந்து நடைபெறும்.

## மாணவர்கள் மற்றும் பெற்றோர்/பராமரிப்பு வழங்குநர்களுக்கு புதிய குடிவரவாளர்களுக்கான ஆதரவுகள்

பாடசாலைகளிலுள்ள குடியமர்வு பணியாளர்கள் கனடாவுக்குப் புதிதாக வந்துள்ள குடும்பங்களுக்கும் பாடசாலையின் satellite மற்றும் வரவேற்பு மையங்களிலுள்ள இரண்டாம்நிலைப் பாடசாலை மாணவர்களுக்கும் குடியமர்வுச் சேவைகளை வழங்குகின்றனர். பங்கேற்பாளர்கள் கல்வி முறையை விளங்கிகொண்டு வெற்றிகரமாக நிலைமாறுவதற்கும் குடியமர்வு செயல்முறையை துரிதப்படுத்துவதற்கும் உதவும் தனிப்பட்ட/குடும்ப சேவைகளை அல்லது குழு செயல்திட்டங்களை குடியமர்வு பணியாளர்கள் வழங்குகின்றனர்.  மேலதிக தகவல்கள்: www.tdsb.on.ca/New-to-Canada/Settlement-Workers.

## Brightspace கண்ணோட்டம் மற்றும் தொழில்நுட்ப ஆதரவு

மெய்நிகர் பாடசாலை மற்றும் Brightspace கண்ணோட்டம்: www.youtube.com/watch?v=MSw4IJSPvi4

மெய்நிகர் கற்கை தொழில்நுட்ப ஆதரவு: www.tdsb.on.ca/நேரில் கற்றல் /மாணவர்-மெய்நிகர்-கற்கை-தொழில்நுட்பம்-ஆதரவு

## VS நடத்தை விதிமுறைகள்

பாடசாலைகள்/கல்வி புகட்டுவோர், மாணவர்கள் மற்றும் பெற்றோர்/பாதுகாவலர்களுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் எதிர்பார்ப்புகளை வழங்கும் [TDSB மெய்நிகர் பாடசாலை விதிமுறைகளை ] தயவுசெய்து பார்வையிடுங்கள்.

## TDSB ஆபிரிக்க மரபுத் திங்களைக் கொண்டாடுகின்றது

பெப்ரவரி மாதத்தில், ஆபிரிக்க மரபுத் திங்களை அங்கீகரித்து அதனைக் கொண்டாடுவதில் TDSB பெருமிதமடைகின்றது. ஆபிரிக்க வம்சாவளி மக்கள் கனடாவுக்கும் இந்த உலகுக்கும் செய்த பல சாதனைகளையும் பங்களிப்புகளையும் கொண்டாடுவதற்கான ஒரு தருணம் இதுவாகும். 2020-2021 ஆம் ஆண்டுக்குரிய தெரிவுசெய்யப்பட்ட கருப்பொருள் ***Kujichagulia: சுய உறுதிப்பாடு*** ஆகும். மேலும் அறிக

## TDSB *சீன* மரபுத் திங்களைக் கொண்டாடுகின்றது

சீன மரபுத் திங்களை (CHM) பெப்ரவரி மாதத்தில் அங்கீகரிப்பதில் TDSB பெருமிதமடைகின்றது. இந்த வருடம் ***எருது வருடமாகும்: விசுவாசம், நேர்மை, பொறுப்பு, கடின உழைப்பு மற்றும் பகுத்தறிவு***. சந்திரப் புத்தாண்டு என்பது வசந்தகால விழா என்றும் அழைக்கப்படுகிறது, அத்துடன் இது சந்திர நாட்காட்டியின்படி சந்திரன் முதலில் தோன்றி 15 நாட்கள் கழித்து வரும் சந்திர நாட்காட்டியின் முதலாவது பூரணை தினத்தன்று முடிவடைகிறது. மேலும் அறிக.

## சமூக ஆதரவு மையம்

சமூக ஆதரவுப் பணியாளர் (CSW) குழுவினரால் ரொறன்ரோ முழுவதற்கும் வழங்கப்படும் தகவல்கள், வளங்கள் மற்றும் எழுச்சியூட்டும் வேலைகளுக்கான அணுகலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

'முன்பதிவின்றி செவ்வாய்கிழமைகளில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கு' காலை 9:00 முதல் 11:00 மணிவரை CSWs களுடன் அந்த நேரத்தில் நேரடியாக இணைவதற்கு வருமாறு குடும்பங்களை அழைக்கின்றோம். மேலும் அறிக அத்துடன் பார்வையிடுங்கள் tdsbHUB.ca.

## விசேட கல்வி பற்றிய அண்மித்த தகவல்கள்

புதுப்பிக்கப்பட்ட தனிப்பட்ட கல்வித் திட்டங்கள் (IEP) பெப்ரவரி மாத முற்பகுதியில் மின்னியல் வழியாக வீடுகளுக்குச் சென்றுள்ளன. இந்த IEP உங்களுக்குக் கிடைக்காதிருந்தால், தயவுசெய்து உங்கள் பிள்ளையின் ஆசிரியர் அல்லது அதிபருடன் ஏதாவது கேள்விகளுக்காகத் தொடர்புகொள்ளுங்கள்.

மார்ச் 1, 2021 அன்று இரவு 7 மணிக்கு அடுத்த விசேட கல்வி ஆலோசனைக் குழு கூட்டத்தில் இணையுங்கள். மேலும் அறிக.

## மெய்நிகர் நூலக ஆதாரவளங்கள்

வீட்டிலிருந்து கற்கும்போது TDSB வழங்கும் இலத்திரனியல் புத்தகங்கள், கலைக்களஞ்சியங்கள், வீடியோக்கள் மற்றும் ஏனைய தகவல்களை மாணவர்களால் அணுகமுடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

TDSB **மெய்நிகர் நூலகத்தில்** மாணவர்கள் கற்பதற்கு ஆதரவளிப்பதற்காக கவனமாகத் தெரிவுசெய்யப்பட்ட, எந்நேரமும் எங்கிருந்தும் அணுகக்கூடிய எண்ணிம ஆதாரவளங்கள் உள்ளன.

பின்வருவனற்றை மாணவர்கள் கண்டறிவதற்கு மெய்நிகர் நூலகம் உதவுகின்றது:

- **பாடத்திட்டத்துடன் தொடர்புடைய இணையவழி ஆதாரவளங்கள்/ உதவிகள்- பாலர் வகுப்பு முதல் தரம்12 வரை கற்போருக்கு** செயல்திட்டங்கள் மற்றும் வீட்டுப்பாட வேலைகளில் உதவுவதற்கும், வாசிப்பதை ஊக்குவிப்பதற்கும் பார்வையிடுவதற்குமென பல்வேறு வடிவங்களில் இலத்திரனியல் புத்தகங்கள், தரவுத்தள கட்டுரைகள், ஊடக ஒளிபரப்புகள், மற்றும் இணையக் கருவிகள் (Read Watch Learn and Find என்பதைப் பார்வையிடுங்கள்)

- ஆராய்ச்சி, கணிதப் பயிற்சி, விளையாட்டுகள், வீட்டுப்பாட வேலைகளில் **உதவுவதற்கான பாடங்களுடன் தொடர்புடைய வலைய இணைப்புகள்** (Find என்பதைப் பார்வையிடுங்கள்)

- **கேட்டறிதல்** அல்லது **ஆராய்ச்சி செயல்திட்டம்** ஒன்றைத் தொடங்குவதற்கான ஆதாரவளங்கள் (Inquiry and Find என்பதைப் பார்வையிடுங்கள்)

- வாசித்தலுக்கான ஆலோசனைகள் மற்றும் **புத்தகங்கள் பற்றிய மாணவரது கருத்துரைகள்** ('Read and Just Read It' என்பதைப் பார்வையிடுங்கள்)

மெய்நிகர் நூலகத்தை www.tdsb.on.ca/library என்ற வலைத்தளத்தில் அல்லது உங்களுடைய பாடசாலையின்

வலைப்பக்கம் அல்லது மாணவருக்கான உங்களுடைய Brightspace வகுப்பறையூடாகத் தேடிப்பாருங்கள்.

வீட்டில் மாணவர்களுடன் சேர்ந்து மெய்நிகர் நூலகத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றிய மேலதிக தகவல்களுக்கு, Parent என்ற buttonஐ இடதுபக்க toolbarஇல் தேடிப்பாருங்கள்.

மெய்நிகர் நூலக ஆதாரவளங்கள் பலவற்றை வீட்டிலிருந்து அணுகுவதற்காகத் தயவுசெய்து உங்களுடைய பிள்ளையின் ஆசிரியரிடம் **மெய்நிகர் நூலக கடவுச்சொல் தகவல்கள் பக்கம் ஒன்றைக்** கேளுங்கள்.

## பெப்ரவரி மாதம் பாலர் வகுப்புகளுக்குப் பதிவுசெய்யும் மாதமாகும்

மேலதிக தகவல்களுக்கும் பதிவு செய்வதற்கான தெரிவுகள் பற்றி அறிவதற்கும் : www.tdsb.on.ca/kindergarten.

## மெய்நிகர் களப் பயணங்கள் மற்றும் சிறப்புக் கூட்டங்கள்

அண்மையில், தரம் 3 மற்றும் தரம் 6 ஆசிரியர்கள் பலர் தொழில்சார் கற்றல் வாய்ப்புகளைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தியிருந்தனர். மாணவர்களும் நிகழ்நேர, ஊடாட்டமுள்ள மெய்நிகர் கூட்டங்கள் மற்றும் களப்பயணங்களில் பங்குபற்றினர். எழுச்சியூட்டும் இந்த வாரங்களில், 3,000 க்கு மேற்பட்ட மாணவர்களும்160 க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் இந்த நிகழ்சி மூலம் பயனடைந்தனர்.



தரம் 3 மெய்நிகர் கூட்டங்களில் படைப்பாற்றல்மிக்க கலை நிகழ்வுகளும், சவாலான இந்தக் காலகட்டத்தில் உடல்ரீதியாகச் சுறுசுறுப்பாக இருக்கவேண்டியதன் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்வதற்கான அடிப்படை உடல் அசைவுக்கான நிகழ்வுகளும் உள்ளடங்கியிருந்தன.

தரம் 6 மெய்நிகர் பயணங்கள், ஸ்காபோரோ வெளிப்புறக் கல்விப் பாடசாலையுடன் பல்லுயிர் வாழ்நிலை பற்றிக் கவனம் செலுத்தும் வெளிப்புறப் பயணங்களுடன் தொடர்புபட்டிருந்தன.

புதிய திறன்களைக் கற்றறிந்து கொள்ளும் பொருட்டு ஆசிரியர்கள் ஒருவருடன் ஒருவர் இணைந்து செயலாற்றும் வேளையில் மாணவர்கள் கற்றலில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

## மெய்நிகர் பாடசாலைகளின் பணியாளர் விபரக்கொத்து

இலகுவில் பார்வையிடுவதற்காக மெய்நிகர் பாடசாலை நிர்வாகக் குழுவினரின் விபரக்கொத்து கீழ்வருமாறு. ஒவ்வொரு கற்றல் மையத்திலுமிருக்கும் அதிபர்கள் மற்றும் துணை அதிபர்கள் தரங்களுக்கமைய அமர்த்தப்பட்டுள்ளனர்.

கற்றல் மையம் 1 மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை

கற்றல் மையம் 2 மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை

கற்றல் மையம் 3 மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை

கற்றல் மையம் 4 மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை

## தொடரும் தொழில்முறைக் கற்றல்

மாணவர்களை கற்றலில் ஈடுபடுத்தி எழுத்தறிவு மற்றும் கணிதத்தை அவர்கள் ஆழமாகக் கற்பதை ஊக்குவிப்பதற்காக, ஆசிரியர்கள் தமது அறிவையும் இலத்திரனியல் தளங்களையும் கருவிகளையும் பயன்படுத்தும் செயற்பாட்டை ஆழமாக்கும்பொருட்டு தொடர்ந்தும் தொழில்முறை கற்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஆசிரியர்கள் தங்களது தரம் சார்ந்த குழுவினருடன் கற்றுக்கொண்டிருக்கும் அதேநேரத்தில், மாணவர்கள் பின்வருபவை உள்ளடங்கலாக சில வியக்கத்தக்க சமூக பங்காளருடன் இணைந்து மெய்நிகர் களப்பயணங்களில் பங்குபற்றினர்: ரொறன்ரோ பொது நூலகம், ரொறன்ரோ வெளிப்புறக் கல்வி நிலையங்கள் மற்றும் நாம் அறிவியல் பேசுவோம் (Let's Talk Science). வழமையான மெய்நிகர் வகுப்பறைக்கு வெளியே வருவதற்கும் புதிய இடங்களைச் சுற்றிப்பார்ப்பதற்கும் மெய்நிகர் கதைநேரங்கள், campfire இல் (சுடரொளிக் களியாட்டத்தில்) ஒன்றிணைந்து பாடுதல் மற்றும் STEM வடிவமைப்பு சவால்கள் வேடிக்கையான வழிமுறைகளாக இருந்தன.

பெப்ரவரி மாதத்தில் சில தொழில்முறை கற்றல் உதாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கின:

- வாசிப்பதற்கான உத்திகள் & வழிகாட்டப்பட்ட வாசித்தல்
- விசேட கல்வி: மெய்நிகர் கற்றலில் மாணவர்களுக்கு ஆதரவளித்தல்
- சுற்றுச்சூழல் மற்றும் IEP எழுதுதல் மற்றும் செயற்படுத்தல்
- கற்றலுக்கான உலகளாவிய வடிவமைப்பு
- கலாச்சாரரீதியாக எதிர்வினையாற்றும் மற்றும் பிரதிபலிக்கும் கற்பித்தல் கலை
- அத்துடன் இன்னும் பல!

பெப்ரவரி 2021

## செய்திகளில் மெய்நிகர் பாடசாலைகள்

TDSB மெய்நிகர் ஆரம்பநிலைப் பாடசாலை பற்றிய ஆர்வமூட்டும் சில செய்திகளை அறியுங்கள்:

- TDSB மாணவர்கள் வீட்டிலிருந்தவாறு இணையத்தில் செய்தித்தாளை உருவாக்குகின்றனர் (உலகளாவிய செய்தி)